# 2020–2021– ஆம் ஆண்டைய வரவு செலவு திட்ட முக்கிய அம்சங்கள்

- ‘எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்னும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் அடங்கியுள்ளன.

- 2018–19 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 8.17 விழுக்காட்டை அடைவதை உறுதி செய்துள்ளன. 2019–20 ஆம் ஆண்டில், 7.27 விழுக்காடு என்று மதிப்பிடப்பட்ட வளர்ச்சி விகிதமானது, அனைத்திந்திய அளவில் கணிக்கப்பட்ட 5 விழுக்காட்டைக் காட்டிலும் அதிகமானதாகும்.

**தமிழ் வளர்ச்சி**

- ஹார்வர்டு பல்கலைக்கழகம், ஹூஸ்டன் பல்கலைக்கழகம், வாரணாசி இந்து பல்கலைக்கழகம் மற்றும் கௌஹாத்தி பல்கலைக்கழகம் உட்பட, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள புகழ்ப்பெற்ற பல்கலைக்கழகங்களில், தமிழ்மொழி கற்பித்தலைக் கொண்டுவர சீரிய முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

- ஒரு கோடி ரூபாய் மானியத்தில், தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் பெயரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கண ஆய்வு இருக்கையை இந்த அரசு நிறுவ உள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தமிழ் வளர்ச்சித் துறைக்காக 74.08 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப் பெற்ற பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக, உலகத்தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைத்திட, 12.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

**நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்குகள்**

- ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்துள்ள நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகள்– 2030, மத்திய அரசாலும், மாநில அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 17 இலக்குகள் மற்றும் 169 குறிப்பிட்ட இலக்குகள், மாநிலத்தில் வளர்ச்சி ஏற்படுத்தும் கட்டமைப்பாக அமையும். அவற்றில் 19 இலக்குகள் 2020 ஆம் ஆண்டிற்குள்ளும், இரண்டு இலக்குகள் 2025 ஆம் ஆண்டிற்குள்ளும் இதர இலக்குகள் 2030 ஆம் ஆண்டிற்குள்ளும் எட்டப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. 2020 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டிய இலக்குகளை எய்துவதற்காக செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த இலக்குகளை எட்டுவதை உறுதி செய்வதற்கு, தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களை அனைத்துத் துறைகளும் வளர்ச்சி இலக்குகளுடன் ஒருங்கிணைத்து வருகின்றன. தேவைக்கேற்ப புதிய திட்டங்களும் உத்திகளும் வகுக்கப்படும். 2019 ஆம் ஆண்டு நித்தி ஆயோக் (NITI Aayog) வெளியிட்ட, இந்தியாவிற்கான நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகள் குறியீட்டில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. வளர்ச்சி இலக்குகள் எய்தப்படுவதைக் கண்காணிப்பதற்கான

வலைதள அமைப்பை 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் தேதியன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. மாநிலத்தின் சாதனைகளை துல்லியமாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் மத்திய அரசிற்கு தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகளால், இலக்குகளை அடைவதற்கான தரவரிசையில் தமிழ்நாடு முன்னேற்றம் பெறும் என நம்புகிறோம்.

**நிர்வாகம்**

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் நாளன்று மத்திய அரசு வெளியிட்ட நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில், ஒட்டுமொத்தத் தரவரிசையில், நாட்டில் உள்ள 18 பெரிய மாநிலங்களில், தமிழ்நாடு முதலிடம்.

- 'இந்தியா டுடே' பத்திரிக்கை நவம்பர் 2019–இல் 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்விலும் 'ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம்' என்று தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- வறுமை ஒழிப்பில் கொள்கை முடிவை மேற்கொள்ள தெற்கு ஆசியாவின் ஜெ–பால் (J-PAL) மையத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**வருவாய் நிர்வாகம்**

- 2019 ஆம் ஆண்டில் மட்டும், முன்னெப்போதும் இல்லாத அளவில் 5 புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய மாவட்டங்களில், 550 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகங்கள் அமைப்பதற்கான இடங்களைக் கண்டறிவதற்கான பணிகள்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களுக்கு 4,315.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நில அளவைத் துறையால் பயிற்சி அளிக்கப்பட்ட, உரிமம் பெற்ற நில அளவர்களை உருவாக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இப்புதிய நில அளவர்களின் முதல் அணிக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன், நில அளவை தொடர்பான சில பணிகளை மேற்கொள்வதற்கு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கி மறுபயிற்சியும் அளிக்க அரசு முடிவு. இதனால், பட்டா மாறுதல் வழங்கக் கோரும் மனுக்களுக்கு விரைவில் தீர்வுகாண வகை செய்யப்படும்.

- புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்புகளை வரன்முறை செய்வதற்கான சிறப்புத் திட்டத்தினை அரசு ஆகஸ்ட் மாதம் 2019–ல் சீரமைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்புகள் வரன்முறைப்படுத்தப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும். ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் மக்களில்

தகுதியானவர்களுக்கு, அரசு நிலங்களில் அல்லது தனியாரிடமிருந்து கையகப்படுத்திய நிலங்களில் மாற்று வீட்டுமனை வழங்கப்படும்.

- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் (LIC) இணைந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள அனைத்துக் குடும்பங்களும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள, 'புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கான' விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்கு, 200.82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

**பேரிடர் மேலாண்மை**

- பெருநகர சென்னையில், விரிவான வெள்ள பேரிடர் தணிப்பு திட்டத்தினை 3,000 கோடி ரூபாய் மொத்தச் செலவில் செயல்படுத்திட உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடம் தமிழ்நாடு அரசு முன்மொழிந்துள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பேரிடர் மேலாண்மைக்காக 1,360.11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை மாநகரில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கு 100 கோடி ரூபாய் மானியம் பதினைந்தாவது நிதிக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**சட்டம் ஒழுங்கு**

- காவல் துறையிலுள்ள காலிப் பணியிடங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டு, தற்போது 1.13 இலட்சம் காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 2020–21 ஆம் ஆண்டில், மேலும், 10,276 சீருடைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர்.

- குற்றங்களையும், குற்றவாளிகளையும் கண்காணிக்கும் கணினி வலையமைப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, கட்டுமானப் பணிகளுக்காக 431 கோடி ரூபாயும், காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக 100 கோடி ரூபாயும் உட்பட, மொத்தமாக 8,876.57 கோடி ரூபாய் காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

- நவீன தீயணைப்பு மீட்புக் கருவிகள் வாங்குவதற்காக 13.67 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பதினைந்தாவது நிதிக்குழு தேசியப் பேரிடர் நிவாரண மற்றும் மேலாண்மை நிதியத்தில், தீயணைப்புப் பணிகள் நவீனமயமாக்கல் மற்றும்

விரிவாக்கத்திற்காக 1,000 கோடி ரூபாயை பரிந்துரைத்துள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு முன்மொழிவுகளை அனுப்பும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 405.68 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறைச்சாலைகள்**

- சிறைவாசிகள் சிறைத் தொழிற்கூடங்களில் ஈட்டும் ஊதியத்தில் அவர்களின் பராமரிப்புக்காகப் பிடித்தம் செய்யும் தொகை 50 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, ஊதியத்தில் அவர்களின் பங்கு 30 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்படும்.

- சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்காக வரும் நிதியாண்டில், மேலும் 6 பெட்ரோல் நிலையங்கள் அமைக்கப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டில், சிறைத் துறைக்கு 392.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாலைப் பாதுகாப்பு**

- தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை திட்டம், சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்ட பிறகு, அவசர சிகிச்சை பிரிவில் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 8.3 சதவீதத்திலிருந்து 2.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. தற்போது அணுக வசதியாக அமைந்துள்ள 80 அரசு மருத்துவமனைகள், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு இயக்கத்தினை (Tamil Nadu Road Safety Misson) அரசு உருவாக்கும். இந்த இயக்கம், பல்வேறு துறைகளின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து, 'சாலை விபத்தில்லா தமிழ்நாடு (Road Accident-free Tamil Nadu)' என்ற இலக்கை அடைவதற்காக, அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

- பல்வேறு துறைகளின் நிதி ஒதுக்கீடு மற்றும் திட்டங்களை ஒருங்கிணைத்து, சாலைப் பாதுகாப்பிற்கான நிதி ஒதுக்கீடு 500 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.

- நெடுஞ்சாலைத் துறையில் சாலைப் பாதுகாப்பிற்கான தனியானதொரு பிரிவு உருவாக்கப்படும். சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் சாலைப் பாதுகாப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

**நீதி நிர்வாகம்**

- 2011 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 494 புதிய நீதிமன்றங்களை இந்த அரசு அமைத்துள்ளது. குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் குற்றங்களை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென 16 சிறப்பு போக்சோ (POCSO) நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- மொத்தம் 1,317.04 கோடி ரூபாய் செலவில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புகள் உட்பட பிற உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீதி நிர்வாகத்திற்கென 1,403.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு**

- தமிழ்நாட்டின் 8.58 இலட்சம் கோடி ரூபாய் மொத்தச் செலவிலான 179 திட்டங்கள் மத்திய அரசின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

**வேளாண்மை**

- காவேரி டெல்டா பகுதியினை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது, தமிழக அரசு வேளாண்மைத் துறைக்கு அளித்து வரும் பெரும் முக்கியத்துவமாகும்.

- திருந்திய நெல் சாகுபடி முறையானது 2020–21 ஆம் ஆண்டில் 27.18 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் விரிவுபடுத்தப்படும்

- கரும்பு விவசாயிகள் நுண்ணீர்ப் பாசனத்தை மேற்கொள்வதை ஊக்குவிக்க, 2019–20 ஆம் ஆண்டில் 68.35 கோடி ரூபாய் சிறப்பு கூடுதல் நிதியுதவி அனுமதிக்கப்பட்டது. இத்திட்டமானது 75 கோடி ரூபாய் கூடுதல் நிதியுதவியுடன் 2020–21 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

- 2019–20 ஆம் ஆண்டின் அரவைக்காலத்திற்கு டன் ஒன்றிற்கு 100 ரூபாய் வரை என்ற அளவில் 110 கோடி ரூபாயை போக்குவரத்து மானியமாகவும் அரசு வழங்கும்.

- சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பண்ணைய முறை, தற்போது 28 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, 2020–21 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

- ஏற்கெனவே 75 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது, 45 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

- 2019–20 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் அறிவித்தவாறு, அரசு, ‘தமிழ்நாடு உழவர் உற்பத்தியாளர் அமைப்புக் கொள்கை’யினை வெளியிட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டில் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100.56 கோடி ரூபாயில் நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

- தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி இயக்கத்தை, நிலத் தொகுப்பு அடிப்படையில் மறுசீரமைப்பு செய்வதன் மூலம், ஒவ்வொன்றும் 250 ஏக்கர் கொண்ட 10,000 நிலத் தொகுப்புகள், எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் ‘தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி வளர்ச்சி இயக்கத்தின்’ கீழ் மேம்படுத்தப்படும். 2020–21 ஆம் ஆண்டில், 180 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் 7.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்ட 3,000 நிலத் தொகுப்புகள் பயனடையும்.

- வேளாண் நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகள், துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பெறுவதற்கு, ‘உழவர்–அலுவலர் தொடர்புத் திட்டத்தை’ அரசு அறிமுகம் செய்யும்.

- பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மாநில அரசின் பங்குத் தொகைக்காக, 724.14 கோடி ரூபாய் என்ற உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுடன், 2020–21 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

- நுண்ணீர்ப் பாசனத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு கடந்த 2 ஆண்டுகளாக முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. வரும் 2020–21 ஆம் ஆண்டில் 1,844.97 கோடி ரூபாய் செலவில் 7.41 இலட்சம் ஏக்கர் நிலங்கள் நுண்ணீர்ப் பாசன வசதி பெறும்.

- தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு மையங்களை அமைக்க 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, கடலூரில் முந்திரி, பெரம்பலூரில் வெங்காயம், தேனியில் முருங்கை, ஈரோட்டில் மஞ்சள், தென்காசியில் எலுமிச்சை மற்றும் தூத்துக்குடியில் மிளகாய் ஆகியவற்றிற்கான மையங்கள் அமைக்க உள்ளது. தோட்டக்கலைப் பயிர் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க, 2020–21 ஆம் ஆண்டில், 325 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

- தொழிலாளர் பற்றாக்குறையை சரிசெய்வதற்கும், பண்ணைச் செயல்பாடுகளை எளிமையாக்குவதற்கும் வேளாண் இயந்திரமயமாக்கலுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போது மாநிலத்தில், 1,665 வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களும், 997 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களும், 15 கரும்பிற்கான வேளாண் இயந்திர வாடகை மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2020–21 ஆம் ஆண்டில், மொத்த நிதியொதுக்கீடான, 200 கோடி ரூபாய் மதிப்பில் 100 வட்டார அளவிலான மற்றும் 250 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்படும்.

- பிரதம மந்திரியின் கிஸான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகா அபியான் திட்டம், 10 குதிரைத் திறன் வரை கொண்ட 17,500 தனித்தியங்கும் சூரிய சக்தி பம்பு செட்டுகள் 70 சதவீதம் மானியத்துடன் வேளாண் பொறியியல் துறை அமைத்து தரும். வேளாண்மைக்கான மின் இணைப்பிற்கு விண்ணப்பித்து காத்திருக்கும் விவசாயிகளுக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு 472.85 கோடி ரூபாய் ஆகும். இதில், தமிழ்நாடு அரசின் பங்கு தொகைக்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 208.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் 77.94 கோடி ரூபாய் செலவில் 53.36 ஏக்கர் பரப்பளவில் மெகா உணவுப் பூங்கா அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- 2020–21 ஆம் நிதியாண்டில், பிரதம மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ், 218 கோடி ரூபாய் செலவில், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் மேலும் 8 வேளாண் பதப்படுத்தும் மண்டலங்கள் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு 11,894.48 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

- 2020–21 ஆம் நிதியாண்டில் பயிர்க்கடனாக மொத்தம் 11,000 கோடி ரூபாய் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக வழங்கப்படும்.

- கடன் தவணைகளை முன்கூட்டியே செலுத்துபவர்களுக்கு முழு வட்டியை தள்ளுபடி செய்ய ஏதுவாக, வரவு–செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொது விநியோகத் திட்டம்**

- ஸ்மார்ட் குடும்ப அட்டை வைத்திருப்போர், மாநிலத்தின் எந்தவொரு நியாயவிலைக் கடையிலும் தங்களுக்குரிய பொருட்களை வாங்கிக்கொள்ளும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

- 2020–21 ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தம் 6,500 கோடி ரூபாய் உணவு மானியத்திற்காகவும், பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்திட கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியமாக 400 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

**கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம்**

- கால்நடை பராமரிப்புத் துறையை மேலும் வலுப்படுத்தும் விதமாக, சேலம் மாவட்டம் தலைவாசலில் கால்நடை அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான மேம்பட்ட நிலையம்.

- இக்கல்வி நிலையமும், கால்நடைப் பூங்காவிற்கான இதர வசதிகளும், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் நிதி ஆதாரங்களிலிருந்தும், நபார்டு வங்கியின் நிதி உதவியுடனும், 1,020 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 199.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம்**

- மீன்பிடித் தடைக்காலத்தில் உதவித்தொகை வழங்குவதற்காகவும், மீனவர்களுக்கான சேமிப்புத் திட்டத்திற்காகவும், சிறப்பு உதவித் தொகை வழங்குவதற்காகவும் 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 298.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 4,997 மீன்பிடி விசைப்படகுகளில் 18 கோடி ரூபாய் செலவில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்படும்.

- 235 கோடி ரூபாய் செலவில், விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆலம்பரைக் குப்பத்திலும், 150 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், நாகப்பட்டினம் மாவட்டம் ஆறுகாட்டுத்துறையிலும் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டத்தில், 30 கோடி ரூபாய் செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர்கள் வரும் ஆண்டில் அமைக்கப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மீன்வளத் துறைக்கு 1,229.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீர்வள ஆதாரத்துறை**

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்பை பாதுகாத்தல் மற்றும் வலுப்படுத்துதல் இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாகத் தொடங்கியுள்ளார்.

- குடிமராமத்து திட்டத்தின் கீழ், இதுவரை 4,865 பணிகளை, 930.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப்பணித் துறை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு, 4,059

பணிகள் நிறைவடைந்துள்ளன 2020–21 ஆம் ஆண்டில் 1,364 நீர்ப்பாசனப் பணிகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டில், கிராமங்களில் மீதமுள்ள குளங்கள் மற்றும் ஊருணிகள் ஆழப்படுத்துதல் மற்றும் நகர்ப்புரங்களில் உள்ள கோவில் குளங்கள் புனரமைப்பு ஆகிய பணிகள், பல்வேறு திட்டங்களின் கீழான நிதியைக் கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் காவேரி வடிநிலப் பகுதிகளில் உள்ள கால்வாய்களில், 392 தூர்வாரும் பணிகளை அடுத்த பருவமழைக் காலத்திற்கு முன்னதாக நிறைவு செய்வதற்காக, 67.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கல்லணைக் கால்வாய் அமைப்பின் பணிகள், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உதவியுடன் 2,298 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கென 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடன், 1,560 கோடி ரூபாய் செலவில் பருவகால மாற்றத் தழுவல் திட்டத்தை செயல்படுத்தும் பணி காவேரி பாசனப் பகுதியில் முழுவீச்சில் முன்னேற்றமடைந்து வருகிறது.

- கட்டளை உயர்மட்டக் கால்வாய் பணிக்காக 335.50 கோடி ரூபாயும், 230 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நொய்யல் துணைப் படுகை திட்டம், 184 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ராஜவாய்க்கால் திட்டத்திற்கும் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- வெள்ள உபரி நீரினை மேட்டூர் அணையிலிருந்து சேலம் மாவட்டத்தில் வறண்ட குளங்களுக்கு திருப்பி விடுவதற்கான சாரபங்கா நீரேற்றுப் பாசனத் திட்டம் 565 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள, அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நடந்தாய் வாழி காவேரி திட்டத்திற்கான 11,250 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதனிலைத் திட்ட அறிக்கை இந்திய அரசின் நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு கொள்கை ரீதியான ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அணைகளுக்கான புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டம் ஜூன் 2020 வரை நீட்டிக்கப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் (DRIP-II) 610.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 37 அணைகள் சேர்க்கப்பட்டுள்ளது. அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டு கட்டங்களுக்கும் சேர்த்து (DRIP-I & II) 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 220.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு பாசன விவசாய நவீனமயமாக்கல் திட்டம் 2,962 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது.

- இரண்டாம் கட்டத்தில் 16 உப வடிநிலப் பகுதிகளில், 906 குளங்கள் மற்றும் 183 அணைக்கட்டுகளைப் புனரமைத்தல் மற்றும் 37 செயற்கை செறிவூட்டல் கிணறுகள் கட்டுமானப் பணிகள் 649.55 கோடி ரூபாய் செலவில் 2020–21 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். இதற்காக 2020–21 ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 583.40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அத்திக்கடவு–அவினாசி நீர்ப்பாசனத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை அரசு பெற்றுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- காவேரி குண்டாறு இணைப்புத் திட்டம். இதன் முதல் கட்டத்தில், காவேரி முதல் தெற்கு வெள்ளாறு வரையிலான இணைப்புக் கால்வாய் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் முதனிலைப் பணிகளை மேற்கொள்வதற்காக 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2014–15 முதல் 2019–20 ஆம் ஆண்டுவரை, 2,241.19 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (RIDF) கீழ், புதிய குளங்களை உருவாக்குதல், புதிய அணைக்கட்டுகளைக் கட்டுதல் மற்றும் புதிய பாசன வாய்க்கால்கள் அமைப்பதற்கான 307 பணிகளை செயல்படுத்தியதில், 261 பணிகள் நிறைவடைந்து, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், நபார்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளைச் செயல்படுத்த 655.38 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தி 6,991.89 கோடி ரூபாயாக உள்ளது.

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

- 2017ஆம் ஆண்டைக் காட்டிலும் 83.02 சதுர கிலோமீட்டர் அளவிற்கு தமிழ்நாட்டின் வன நிலப்பரப்பு அதிகரித்துள்ளது.

- தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் (Tamil Nadu Biodiversity Conservation and Greening Project) இரண்டாம் கட்டப் பணிகள் 2020–21 ஆம் நிதியாண்டில் 920.56 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும். சமூகப் பங்களிப்புடன் சீர்குலைந்த காடுகளை மீட்டெடுப்பதற்கான ஒரு விரிவான திட்டத்தை 2,029.13 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த நபார்டு நிதியுதவி கோரப்படும்.

- கூவம் நதியில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. அடுத்த கட்டத்தில், பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அதன் வடிகால்களையும் கூவம், அடையாறு நதிகளின் அனைத்து வடிகால்களையும் 5,439.76 கோடி ரூபாய் செலவில் அரசு மறுசீரமைக்கும்.

- பொதுப்பணித் துறை மூலம் 25 கோடி ரூபாய் செலவில், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சிட்லபாக்கம் ஏரியை மீட்டெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். ஈரோடு மாவட்டம் ஓடத்துறை ஏரியை மீட்டெடுக்கும் பணிகள் 3.2 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப்பகிர்வு**

- 2020–21 ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5,306.95 கோடி ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6,754.30 கோடி ரூபாயும் நிதிப்பகிர்வாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பதினைந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளில் 2020–21 ஆம் ஆண்டிற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 3,607 கோடி ரூபாயும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1,737 கோடி ரூபாயும், அதாவது மொத்தமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் 5,344 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட மானியத் தொகையில்,'பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை' கொண்ட ஐம்பது நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு தனியே மானியம் வழங்க பதினைந்தாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரையின்படி, தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிகளுக்கு மொத்த மானியமாக 556 கோடி ரூபாய் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

- கிராமப்புற, நகர்ப்புரக் குடியிருப்புப் பகுதிகளில் இதுவரை மேற்கொள்ளப்படாத மிக அத்தியாவசியமான சிறு சிறு பணிகளை மேற்கொள்வதன் மூலம், அப்பகுதிகளில் அடிப்படைத் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய இயலும். எனவே, 2020–21 ஆம் ஆண்டில் இத்தகைய அத்தியாவசியமான உட்கட்டமைப்புப் பணிகளை 500 கோடி

ரூபாய் செலவில் மேற்கொள்வதற்கான ஒருமுறை சிறப்புத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

**ஊரக வளர்ச்சி**

- முதலமைச்சரின் கிராமத் தன்னிறைவு வளர்ச்சித் திட்டம் என்ற புதிய ஐந்து ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்த உள்ளது. குடிநீர் வழங்கல், சுகாதாரம், கல்வி, உணவுப் பாதுகாப்பு, அணுகு சாலைக் கட்டமைப்பு, இடுகாடுகள், தெரு விளக்குகள், வீட்டு வசதி, வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் குக்கிராம அளவில் தன்னிறைவு அடைவதற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இடைவெளியை நிரப்பும் ஊக்க நிதிக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் (ஊரகம்) கீழ், 8,968.39 கோடி ரூபாய் செலவில், 5,27,552 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 2011–12 ஆம் ஆண்டிலிருந்து 7,620 கோடி ரூபாய் செலவில், 3,80,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆட்சேபணையில்லா புறம்போக்கு நிலங்களில் வசித்து வருபவர்களின் வீட்டு மனைகளை வரன்முறை செய்து வருவாய்த் துறை பட்டா வழங்கியுள்ள நபர்களில் தகுதியான நபர்களுக்கு பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டம் (ஊரகம்) மற்றும் முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டங்களின் கீழ் 2020–21 ஆம் ஆண்டு முதல் வீடுகள் கட்டித் தரப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டில், பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 2 இலட்சம் வீடுகளும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், அனைத்துப் பழங்குடியினர் குடும்பங்களுக்கும் வீட்டுவசதியை வழங்கும் வகையில், அவர்களுக்கான 8,803 வீடுகள் உட்பட 20,000 வீடுகளும் கட்டித் தரப்படும். முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், சூரியஒளித் தகடுகளை நிறுவுவதற்கான தொகை, வீடு ஒன்றிற்கு 30,000 ரூபாய், வீட்டின் கட்டுமானச் செலவிற்கான தொகையுடன் சேர்க்கப்பட்டு, ஒட்டுமொத்த கட்டுமானச் செலவு வீடொன்றுக்கு 2.1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்திற்காக (ஊரகம்) 3,099.07 கோடி ரூபாயும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

- 2018–2019 ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை செயல்படுத்துவதில், மொத்தமாக 8 தேசிய விருதுகளை தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான மாநில அரசின் பங்காக 375 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- **2019–20** ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றிய, கிராமப்புறச் சாலைகளை தரம் உயர்த்திப் பராமரிப்பதற்காக தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டம் **1,200** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2020–21** ஆம் நிதியாண்டில், இத்திட்டமானது **1,400** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஊரக வளர்ச்சித் துறைக்காக **23,161.54** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாழ்வாதார இயக்கங்கள்

- தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம் இதுவரை **83,257** சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இயக்கத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் **450.65** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டம் (Tamil Nadu Rural Transformation Project) **26** மாவட்டங்களில் உள்ள **120** வட்டாரங்களில் உலக வங்கியின் நிதியுதவியுடன், **918.20** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக **200** கோடி ரூபாயும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக **8** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நகராட்சி நிர்வாகம்

- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கப்பெறும், நிதிக்குழுவால் வழங்கப்படும் நிதிப்பகிர்வு மானியங்கள் உட்பட, சீரான வருவாயினங்களின் அடிப்படையில், நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் விதமாக, கடன் பத்திரங்களும் வெளியிடப்பட்டு நிதி திரட்டப்படும்.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், ‘திறன்மிகு நகரங்கள்’ திட்டத்திற்காக **1,650** கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்காக **1,450** கோடி ரூபாயும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

- உலகவங்கி நிதியுதவியுடன், **3,831** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் (Tamil Nadu Sustainable Urban Development Project (TNSUDP)) கீழ் ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய நகரங்கள் திறன்மிகு நகர்ப்புர மேலாண்மைக்கான மாதிரி நகரங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், 8,155.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர முதலீட்டுத் திட்டம் (Tamil Nadu Urban Flagship Investment Programme (TNUFIP)) செயல்படுத்தப்படும்.

- மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், ஆம்பூர் மற்றும் இராஜபாளையம் ஆகிய இடங்களில், பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2020–21 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு 406 கோடி ரூபாய் ஆகும்.

- கொசஸ்தலை ஆற்றின் வடிநிலப் பகுதியில், 2,518 கோடி ரூபாய் செலவில், 765 கிலோமீட்டர் நீளத்திற்கு சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த வெள்ள நீர் வடிகால் திட்டத்தை பெருநகர சென்னை மாநகராட்சி தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்காக, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி ஒப்புதலை விரைவில் எதிர்நோக்கி, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டு இயக்கத்திற்கு 750 கோடி ரூபாய், சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கத்திற்கு 500 கோடி ரூபாய் உட்பட, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 18,540.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அம்மா உணவகம்

- அம்மா உணவகத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 'இலாப நோக்கமற்ற' ஒரு சிறப்பு நோக்கு முகமையை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அம்மா உணவகத் திட்டத்திற்காக, 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல்

- ஜல் ஜீவன் மிஷன் (JAL JEEVAN MISSION) திட்டத்தின் கீழ், அனைத்து கிராமக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் ஒரு செயல் திட்டத்தினை தமிழ்நாடு அரசு வடிவமைக்கும்.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வரலாற்றில் முதன்முறையாக, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், சாதனை அளவாக, நாளொன்றிற்கு 2,000 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கியது.

- இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 3,041 கோடி ரூபாய் மொத்தச் செலவில் நாள் ஒன்றிற்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட, இரண்டு கடல்நீர்

சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவி கோரப்பட்டு, அதற்கான ஒப்புதல்கள் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 1,259.38 கோடி ரூபாய் செலவில், நெம்மேலியில், நாள் ஒன்றிற்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட, எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு மூலம் கடல்நீரை குடிநீராக சுத்திகரிப்பு செய்யும் ஆலை கட்டுமானத்தை சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ‘சுத்திகரிக்கப்பட்ட நீர் மறுபயன்பாடு கொள்கையை’ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர மேம்பாடு

- 2014–15 ஆம் ஆண்டு முதல் ‘பிரதம மந்திரி வீட்டுவசதித் (நகர்ப்புரம்) திட்டத்தின்’, பயனாளிகள் தாமாக தனி வீடுகள் கட்டும் பிரிவின் (BLC) கீழ் 16,774.77 கோடி ரூபாய் செலவில் 5,53,244 வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்துடன், வாங்கும் திறனுக்கேற்ப கூட்டுமுயற்சி வீட்டுவசதி (AHP) பிரிவின் கீழ், 1,32,900 அடுக்கு மாடி குடியிருப்புகளை 13,677.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கும் மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டில், 1,12,876 தனி வீடுகள் மற்றும் 65,290 அடுக்குமாடி குடியிருப்புகளுக்குமான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- தமிழ்நாடு வீட்டுவசதித் துறை வலுவூட்டல் திட்டத்தின் கீழ், கொள்கை சீர்திருத்த நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்துதல், சமூகத்தில் உள்ள அனைவரும் பயனடையும் வகையில் திறமையாகச் செயல்படும் ஒரு வீட்டுவசதி சந்தையை உருவாக்கல், பொதுத் துறையில் ஏழை எளியோர்க்கு வீடுகள் கட்டித் தரவும் வகை செய்யும். இத்திட்டத்திற்கான வளர்ச்சிக் கொள்கை வடிவமைப்பு நிதியாக 45 கோடி அமெரிக்க டாலர் நிதியுதவி ஒதுக்கப்பட்டு, முதற்கட்ட நிதியுதவியாக 20 கோடி அமெரிக்க டாலர் நிதியுதவி வழங்கப்படும்.

- ஆசிய வளர்ச்சி வங்கியின் 50 கோடி அமெரிக்க டாலர் கடனுதவியுடன், 5,000 கோடி ரூபாய் (71.5 கோடி அமெரிக்க டாலர்) மொத்த மதிப்பீட்டுச் செலவில், ‘நகர்ப்புர ஏழை எளியவர்களுக்கான நிலைக்கத்தக்க வீட்டுவசதி மற்றும் உறைவிடத் திட்டத்தின்’ கீழ், வெள்ளத்தால் பாதிப்பிற்கு உள்ளாக வாய்ப்புள்ள நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்போர், நகர்ப்புர ஏழை மக்கள் மற்றும் இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வீட்டுவசதியும், மண்டலத் திட்டமிடல் பணிகளும் 2020–21 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும்.

- இத்திட்டத்தின் முதற்கட்டமான 21.5 கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ள திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், திருநெல்வேலி, காரைக்குடி, தஞ்சாவூர், பள்ளிப்பாளையம், திண்டுக்கல் மற்றும் தேனியில் 431 கோடி ரூபாய் செலவில் ஆறு துணை திட்டங்கள் உடனடியாகச் செயல்படுத்தப்பட உள்ளன.

- இரண்டடுக்கு கொண்ட தமிழ்நாடு உறைவிட நிதியானது, நகர்ப்புர வாங்கத்தக்க வீட்டுவசதித் திட்டங்களுக்கு முதலீடு பெற்றுத் தருவதற்கு உருவாக்கப்பட்ட, இந்தியாவில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய முதல் முதலீட்டு நிதியம் ஆகும்.

- உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி, முறையே 245 கோடி ரூபாய் மற்றும் 700 கோடி ரூபாய் முதலீட்டை, வாங்கத்தக்க வீட்டுவசதித் துறை வளர்ச்சிக்காக அளிக்க உறுதியளித்துள்ளது.

- 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தில் பொருத்தமான திருத்தங்களை கொண்டு வந்து, வளர்ச்சி உரிமைகள் பரிமாற்றத் திட்டம் மற்றும் நிலத்திரட்டுப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற இரண்டு மாற்றுவழி திட்டங்களை அரசு செயல்படுத்தியுள்ளது. அரசின் திட்டங்களுக்கு நிலம் வழங்குபவர்கள், நிலத்தின் மீதான தங்களின் சில உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்வதையும், அதன் மூலம் புதிய உட்கட்டமைப்புத் திட்டத்தினால் நிலத்தின் மதிப்பில் ஏற்படும் உயர்வின் நியாயமான பலன்களைப் பெறுவதையும் இந்த இரு திட்டங்கள் உறுதி செய்கின்றன.

சென்னை மாநகரக் கூட்டாண்மை

- சென்னை மாநகரம் தொடர்ந்து நிலைக்கத்தக்க பொருளாதார வளர்ச்சி பெறுவதை உறுதிசெய்வதற்கு, அரசின் ஒரு முக்கிய முயற்சியாக, உலகவங்கியின் ஆதரவுடன் 'சென்னை மாநகரக் கூட்டாண்மை' என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

- 'சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்துக் குழுமம்' (CUMTA) மறுசீரமைக்கப்பட்டு, அனைத்துத் துறைகள் மற்றும் போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்து, நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்துத் தரும் ஒரு அமைப்பாக வலுவூட்டப்படும். சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தை உலகத் தரம் வாய்ந்த சேவை நிறுவனமாகத் தரம் உயர்த்துதல் மற்றும் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கான முதலீடு ஆகியவை இத்திட்டத்தின் முக்கியப் பகுதிகளாக அமையும். சென்னை மாநகரக் கூட்டாண்மைக்கு உலக வங்கியின் நிதியுதவியாக 100 கோடி அமெரிக்க டாலர்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு, 2020–21 ஆம் ஆண்டில் தேவையான ஒப்புதல்கள் பெறப்படும்.

நெடுஞ்சாலைத் துறை

- ‘ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்’ (CRIDP) மாநிலத்தின் சாலை உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் ஆகும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ‘ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 5,500 கோடி ரூபாயாக கணிசமாக உயர்த்தப்படுகின்றது.

- கோபிசெட்டிப்பாளையம் கோட்டமும் செயல்பாடு அடிப்படையிலான ஒப்பந்த முறையின் கீழ் 2020–21 ஆம் ஆண்டில் கொண்டுவரப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டில் 1,500 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி 1,050 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இதற்கென, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 1,050 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- உலக வங்கிக் கடன் உதவியுடன் இந்த அரசு செயல்படுத்தி வரும் ‘தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்’ இரண்டாவது கட்ட திட்டப் பணிகளுக்கு (TNRSP-II) 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 615.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடன் 655 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் 6,448 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை சுற்றுவட்டச் சாலை திட்டம் 12,301 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். அதில், முதல் கட்டமாக எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரையிலான பகுதிக்கான நில எடுப்புப் பணிகள் 951 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டு, தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் முதல் பிரிவிற்கான பணிகள் 2,673 கோடி ரூபாய் செலவில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனுதவியுடன் மேற்கொள்வதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- சென்னை சுற்றுவட்டச் சாலையின் பகுதி 2 மற்றும் 3ன் கீழ், தச்சூர் முதல் ஸ்ரீபெரும்புதூர் வரையிலான பணிகளுக்கு, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகள் அமைப்பின் (OPEC) சர்வதேச வளர்ச்சி நிதியம் ஆகியவற்றின் 3,346.49 கோடி ரூபாய் கடன் உதவியும் பெறப்பட உள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், வாகன ஓட்டிகளின் நேரத்தை சேமிப்பதற்காகவும், வாகனங்களின் இயக்கச் செலவினைக் குறைப்பதற்காகவும், 'சென்னை மாநகரப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டம்' **4,257** கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, புதிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி கோரி அனுப்பப்பட்டுள்ளது.

- **1,620** கோடி ரூபாய் செலவில், கோயம்புத்தூர் விமான நிலையத்திலிருந்து உப்பிலிபாளையம் வரையில் உள்ள அவினாசி சாலை நெடுகிலும் **10.1** கிலோமீட்டர் நீளத்திற்கு உயர்த்தப்பட்ட சாலைகள் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, **2020–21** ஆம் ஆண்டிற்கான, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **200** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு **15,850.54** கோடி ரூபாயாக கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து

- **1,580** கோடி ரூபாய் மதிப்பிலான பாரத் ஸ்டேஜ்–ஏஐ தரம் கொண்ட **2,213** புதிய பேருந்துகளை வாங்குவதற்கு ஏதுவாக, ஜெர்மன் வளர்ச்சி வங்கியிடமிருந்து முதற்கட்ட நிதியுதவி பெறுவதற்கான திட்ட ஒப்பந்தம், **2019** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **26** ஆம் நாளன்று கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, **2020–21** ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **960** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் ஃபேம் இந்தியா–ஐஐ திட்டத்தின் கீழ், **525** மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகளும் விரைவில் இறுதி செய்யப்பட உள்ளன.

- டீசல் விலை உயர்வினால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவினை ஈடுசெய்ய **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **298** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், நிர்பயா நிதியத்தின் மூலம் **75.02** கோடி ரூபாய் செலவில், கண்காணிப்புக் கேமராக்கள் அனைத்துப் பேருந்துகளிலும் பொருத்தப்படும். **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், **2,716.26** கோடி ரூபாய் போக்குவரத்துத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மெட்ரோ இரயில்

- சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், 118.90 கிலோமீட்டர் நீளமுள்ள மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை விரைவில் முடிப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

- மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை மற்றும் மாதவரம் முதல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலான 52.01 கிலோமீட்டர் நீளமுள்ள வழித்தடங்களுக்கு நிதியுதவி வழங்க ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்துள்ளது. விரிவான திட்ட வடிவமைப்புகள் தயாராக உள்ள நிலையில், இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு பங்கு மூலதன உதவி, சார்நிலைக் கடன் மற்றும் வெளிநாட்டுக் கடனை விடுவிப்பதற்காக மொத்தம் 3,100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எரிசக்தி

- 2011 ஆம் ஆண்டு முதல், மாநில, மத்திய அரசுகளின் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் உட்பட மின்சக்தி கொள்முதல் மூலம் 15,296 மெகாவாட் உற்பத்தித் திறன் கூடுதலாக மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் தற்போதைய ஒட்டுமொத்த நிறுவுதிறன் 31,780 மெகாவாட்டாக உள்ளது. இதில், 13,343 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனும் அடங்கும்.

- தென் மாவட்டங்களில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மின்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கான கட்டமைப்பில் இணைப்பதற்கும், சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத்தில் உள்ள மின்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், 765 கிலோவோல்ட் மற்றும் 400 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதற்கும், ஒட்டப்பிடாரத்தில் 400 கிலோவோல்ட் திறன் மற்றும் விருதுநகரில் 765 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம், 4,650 கோடி ரூபாய் மொத்தச் செலவில் ஆசிய வளர்ச்சி வங்கியின் 45.1 கோடி அமெரிக்க டாலர் கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 450 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தடையில்லா, நம்பகமான மின் வசதியை தொடர்ந்து வழங்க, கிராமப்புற, நகர்ப்புரப் பகுதிகளில் மின் விநியோக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில், தற்போதுள்ள 5,692 விநியோக மின்மாற்றிகள், 785 கோடி ரூபாய் செலவில், 11 கிலோவோல்ட் வளையச் சுற்றுத் தர அமைப்புகளாக மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

- குறிப்பிடத்தக்க பயன்பாடு மற்றும் நிதிப் பயன்கள் அளிக்கக்கூடிய, காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியையும், உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களின் மின் பயன்பாட்டையும் அளவிடும் தானியங்கி அளவீட்டுக் கருவிகளை நிறுவுவதற்கான திட்டத்தை, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் பெரிய அளவில் செயல்படுத்தி உள்ளது.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய இரு கழகங்களின் நிதி மற்றும் இயக்க செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக ஒரு விரிவான ஆய்வை மேற்கொள்ள அரசு நிதியுதவி வழங்கும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 20,115.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வி

- இந்த அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கு அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது. எனவே, அனைத்துத் துறைகளுடன் ஒப்பிடும்பொழுது பள்ளிக்கல்வித் துறைக்கு வரவு–செலவுத் திட்டத்தில் அதிகபட்சமாக 34,181.73 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செயல்திறன் தரக் குறியீட்டின்படி அணுக்கமான பள்ளி வசதியை வழங்குவதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

- தொடக்கக் கல்வியில் மாணவர் நிகர சேர்க்கை விகிதம் 99.88 சதவீதத்தை எட்டியுள்ளது மற்றும் இடைநிற்றல் விகிதம் 0.8 சதவீதமாகக் குறைந்துள்ளது.

- புத்தகப்பைகள், பள்ளிச் சீருடைகள், காலணிகள், குறிப்பேடுகள், பாடப்புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள் மற்றும் வண்ணப் பென்சில்கள் ஆகிய படிப்புக்குத் தேவையான பொருட்களை விலையின்றி வழங்குவதற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் 1,018.39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பதினோராம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கும் அரசால் மடிக்கணினி வழங்கப்படும். இதற்கென, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் 966.46 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 158 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 277.88 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ள நபார்டு வங்கி அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. நபார்டு வங்கித் திட்டங்களுக்காக, 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 258.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தர ஆய்வில், பள்ளிகளில் பாதுகாப்பான குடிநீர் வசதி வழங்கும் பிரிவில், தமிழ்நாடு சிறந்து விளங்கும் மாநிலம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் மாணவர்–ஆசிரியர் விகிதம், இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட விகிதத்தைக் காட்டிலும் போதுமான அளவில் உள்ளது.

- கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 520.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்படுகின்றன.

- அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் ஆகியவற்றின் கீழ் நீண்ட காலமாக கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகையான 3,201.30 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

- இந்த அரசு 2009ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 12(1)(சி)ஐ மிகவும் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. நடப்புக் கல்வியாண்டில் 76,927 மாணவ மாணவியர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதுவரை, 644.69 கோடி ரூபாய் பள்ளிக் கட்டணம் திருப்பியளிக்கப்பட்டுள்ளது. 2020–21 ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்தத் திட்டத்தினை செயல்படுத்த 304.14 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உயர்கல்வி

- அனைவருக்கும் உயர்கல்வி கிடைப்பதை உறுதி செய்வதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. 2011–12 ஆம் ஆண்டிலிருந்து 2019–20 ஆம் ஆண்டு வரையில், 30 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் 27 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில், 14 பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

- ஏழை மாணவர்களும் உயர்கல்வியினைப் பெறும் வகையில், முதல் தலைமுறை மாணவர்களின் கல்விக் கட்டணச் சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 506.04 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூரிலுள்ள அரசு பொறியியல் கல்லூரி இந்த ஆண்டு 75 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்த நிகழ்வைப் போற்றும் வகையில், கோயம்புத்தூரிலுள்ள அரசு பொறியியல் கல்லூரியின் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை தரம் உயர்த்துவதற்காக, 10 கோடி ரூபாய் சிறப்பு மானியத்தை அரசு அளிக்கும். அது மட்டுமின்றி, இக்கல்லூரி மேலும் வளர்வதை விரும்பி, தாமாக முன்வந்து நிதிக்கொடை அளிக்க விரும்பும் புகழ்பெற்ற பல முன்னாள் மாணவர்களைப் பெற்றுள்ளது. 75 ஆம் ஆண்டு விழாவின்

போது, கல்லூரியின் வளர்ச்சிக்காக, முன்னாள் மாணவர்களால் அளிக்கப்படும் பங்களிப்பிற்குச் சமமான பங்களிப்பினை அரசும் வழங்கும்.

- மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு 91.50 கோடி ரூபாய் தொகுப்பு மானியமாக அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அதன் நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு ஏதுவாக 225.78 கோடி ரூபாய் அளிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிக ஓய்வூதிய நிதிச்சுமையை எதிர்கொண்டுள்ளதால், மாநிலத்தின் முதல் பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வூதிய நிதிக்கு சிறப்பு நல்கையாக 11.72 கோடி ரூபாய் அளிக்கப்பட உள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உயர்கல்வித் துறைக்கு 5,052.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை பொருளியல் பள்ளி (Madras School of Economics) புகழ்பெற்ற பொருளியல் கல்வி நிறுவனமாக வளர்ந்துள்ளதுடன், இந்தியாவில் உள்ள பொருளாதாரத்தில் உயர்கல்வி அளிக்கும் நிறுவனங்களிலும் ஒன்றாக விளங்குகிறது. இந்நிறுவனத்தின் பெருமையை அங்கீகரிக்கும் விதமாகவும், சுயமாக பட்டங்களையும், பட்டயங்களையும் வழங்க வழிவகை செய்யும் வகையிலும், அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் (Institute of Special Importance) என்ற தரநிலையை அந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கான சட்டம் இயற்றப்படும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

- நாட்டிலேயே சுகாதாரத் துறையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்கு 2030–இன் படி, ஒரு இலட்சம் உயிர் பிறப்புகளுக்கு தாய்மார்களின் இறப்பு விகிதம் 70 என்ற இலக்கு பல ஆண்டுகளுக்கு முன்கூட்டியே எய்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு பேறுகாலம் வரை 18,000 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே 99.9 சதவீதம் பிரசவங்கள் மருத்துவமனையில் நடைபெறுவது, இத்திட்டத்தின் வெற்றியை சுட்டிக்காட்டுகிறது. இதில், 65 சதவீத பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 60.64 இலட்சம் ஏழை கர்ப்பிணித் தாய்மார்கள் 6,033.81 கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளனர். மத்திய அரசின் மகப்பேறு நிதியுதவி வழங்கும் திட்டமான பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம், மாநில அரசின் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. 2019–20ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து 23.10 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தினைச் செயல்படுத்த 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 959.21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசின் பொது சுகாதார முறையின் மூலமாக, தொடக்க மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ சேவைகளைத் தரமாக வழங்குவதில் தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது. மாநிலத்தில் உள்ள ஆரம்பம் மற்றும் இரண்டாம் நிலை சுகாதார நிலையங்களுக்கான வசதிகளை இந்த அரசு தொடர்ந்து வலுப்படுத்தும். அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்தவும், குறிப்பாக தொற்றா நோய்களின் மேலாண்மையை வலுப்படுத்தவும், ஏற்றத்தாழ்வின்றி, சமமான தாய்–சேய் சுகாதார சேவைகளை வழங்கவும், 2,857 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 260.14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 1.59 கோடி குடும்பங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், திட்டம் தொடங்கப்பட்ட 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை, 41.12 இலட்சம் பயனாளிகள் 6,601.59 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகள் 2,453.22 கோடி ரூபாய் பெற்று, அதைக்கொண்டு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன், மத்திய அரசின் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டு, காப்பீட்டுத்தொகை ஆண்டிற்கு 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்காக 1,033.29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், அரியலூர், கள்ளக்குறிச்சி ஆகிய 11 மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகளை 3,575 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் ஒரே ஆண்டில் நிறுவிட மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி பெற்றுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், இந்த 11 மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்காக 1,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவக் கல்லூரியை அரசே ஏற்றுக்கொண்டு, அது, கடலூர் மாவட்டத்திற்கான அரசு மருத்துவக் கல்லூரியாக அமைக்கப்படும்.

- ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியுடன், மொத்தம் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம், நகர்ப்புறங்களில் உள்ள 11 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள், 10 மாவட்ட மற்றும் மாவட்ட துணை மருத்துவமனைகளுக்கு கட்டடங்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும். இதற்கென 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 510.15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு 15,863.37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களுக்கு மானியம் வழங்குவதற்காக 149.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் 20 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி

- அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், வழக்கற்றுப் போன படிப்புகள் நீக்கப்பட்டு, தொழில் துறையினரின் தேவைக்கேற்ற பயிற்சிகளை வழங்கும் பிரிவுகளைச் சேர்த்து, 17.80 கோடி ரூபாய் செலவில் தொழிற்பிரிவுகள் முழுமையாக மாற்றி அமைக்கப்படும். தொழிற்பயிற்சி நிலையங்களில் 4.77 கோடி ரூபாய் செலவில், தகுதி வாய்ந்த நபர்களுக்கு மின்–வாகனத் தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது. ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் மேம்பாட்டிற்கான தேவையை நிறைவு செய்யும் வகையில், தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு சென்னையில் மாநிலத் திறன் பயிற்சி நிலையம் 1.60 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

- திறன் இடைவெளி குறித்த ஆய்வின் அடிப்படையில், மோட்டார் வாகனங்கள், சுகாதாரம், ஜவுளி, தகவல் தொழில்நுட்பம், வேளாண்மை, தோல் மற்றும் தோல் பொருட்கள், அழகுக் கலை, பொருட்கள் நகர்வு மேலாண்மை, ஆபரணத் தொழில் மற்றும் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், ஆகிய முக்கியத் தொழில் பிரிவுகளில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பயிற்சியளித்து வருகிறது. இளைஞர்கள் தங்களின் திறனை சுய மதிப்பீடு செய்துகொள்ள வகைசெய்யும் ஊடாடலுடன் (Interactive) கூடிய வலைதளம் ஒன்றை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்காக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்துறை

- இந்தியாவிலேயே முதலீடுகளை மிக அதிக அளவில் ஈர்க்கும் ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகிறது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்தாகிய முதலீட்டு ஒப்பந்தங்களை நடைமுறைக்கு கொண்டு வருவதில் இந்த அரசு தனிக்கவனம் செலுத்தியுள்ளது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி ஈடுபாட்டினாலும், இங்கிலாந்து,

அமெரிக்கா, துபாய் போன்ற வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட வெற்றிகரமான அரசுமுறைப் பயணத்தினாலும், பல புதிய முதலீடுகளை இம்மாநிலம் ஈர்த்துள்ளது.

- ஜனவரி மாதம் 2020 ஆம் ஆண்டில், 32,405 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில், 52,075 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரையில், தமிழ்நாட்டிலேயே மிகப்பெரிய தனிப்பட்ட முதலீடாக, குவைத் நாட்டைச் சார்ந்த அல் கெப்லா அல் வட்யா (Al Qebla Al Watya) குழுமம், தூத்துக்குடி அருகில் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை மற்றும் பெட்ரோலியம் வேதிப்பொருட்கள் தயாரிப்பு வளாகத்தை 49,000 கோடி ரூபாய் செலவில் அமைக்கும்.

- சென்னை–பெங்களூரு தொழில் வழித்தடத் திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் 21,966 ஏக்கர் பரப்பளவில் பொன்னேரி தொழில்முனைய மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

- கிழக்கு கடற்கரை பொருளாதாரப் பெருவழிச்சாலை திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். காட்டுப்பாக்கம் அருகே ஜி.எஸ்.டி. சாலையில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் ஃபின்டெக் சிட்டி அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் தொடங்கியுள்ளன.

- புதுமை முயற்சிகளை தொடக்க நிலையிலேயே ஊக்குவிக்க, தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANII) கீழான நிதியுதவியுடன், 53.44 கோடி ரூபாய் செலவில், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூரில் தொழில் புதுமை முயற்சி மையங்களை நிறுவும் பணிகளை தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொள்ளும். 34.81 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வர்த்தக எளிதாக்குதல் மையம் ஒன்று சிறுசேரியில் உருவாக்கப்பட்டு வருகிறது.

- தூத்துக்குடி தொழிற்பூங்கா மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை சுத்திகரிக்கும் ஆலையை, 634 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (SIPCOT) நிறுவும்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் தொழில் துறைக்கான ஊக்கத் தொகை வழங்குவதற்காக 2,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயன்களை விரிவுபடுத்தும் வகையில், தற்போதுள்ள திட்ட

முதலீட்டிற்கான வரம்பு 10 இலட்சம் ரூபாயிலிருந்து 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படுவதுடன், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தகுதி வாய்ந்த மானியத்தின் வரம்பும் 1.25 இலட்சம் ரூபாயிலிருந்து 2.5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். இதனால், ஆயிரக்கணக்கான வளர்ந்து வரும் தொழில்முனைவோர் ஊக்கம் பெறுவார்கள். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 33 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்படும் அதிகபட்ச மூலதன மானியத்தை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக அரசு உயர்த்தி வழங்கும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கல் திட்டம் மற்றும் கடன் உத்தரவாத நிதிக்குழுமத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வட்டி மானியம் தொடர்ந்து 3 சதவீதமாகவே இருந்து வருகிறது. இந்த இரண்டு திட்டங்களுக்கான வட்டி மானியங்களும் 3 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக உயர்த்தப்படும்.

- சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம் உமையாள்புரம், புத்திரகவுண்டன்பாளையம் கிராமங்களில் 4.50 கோடி ரூபாய் செலவில் புதிய தொழிற்பேட்டை நிறுவப்படும்.

- தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் 500 புதிய நிறுவனங்கள் உருவாக்கப்படும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கத் திட்ட செயல்பாடுகளுக்காக 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்காக 607.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு மார்ச் மாதம் 6–ஆம் நாளன்று, தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளி கொள்கை, 2019 – ஐ வெளியிட்டார். புதிய முதலீடுகளை ஈர்த்தல், தொழில்நுட்ப மேம்பாட்டை ஊக்குவித்தல், திறன் இடைவெளியை நிரப்புதல், உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், ஜவுளித் தொழிலாளர்களுக்கு மேலும் சிறப்பான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருதல் மற்றும் சுற்றுச்சூழல் தர நிர்ணயத்தைப் பேணுதல் ஆகியவை இக்கொள்கையின் முக்கியமான அம்சங்களாகும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய ஜவுளிக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட கூடுதல் ஊக்கத்தொகை வழங்குவதற்காக, 48.02 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020–21

ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், கைத்தறி மற்றும் ஜவுளித் துறைக்கு மொத்தம் **1,224.25** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல்

- **23** கோடி ரூபாய் செலவில் சென்னையில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில், நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் ஒன்றினை ஏற்படுத்த மாநில அரசு **5.75** கோடி ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் கோயம்புத்தூரில் **100** கோடி ரூபாய் செலவில் **2.50** இலட்சம் சதுர அடி கூடுதல் அலுவலக பரப்பு மற்றும் திருச்சியில் **40** கோடி ரூபாய் செலவில் **1** இலட்சம் சதுர அடி கூடுதல் அலுவலக பரப்பு நிறுவப்படும்.

- தமிழ்நாட்டின் மாநில குடும்பத் தரவு தளம் உருவாக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். அரசு சேவைகளை தங்குதடையின்றி வழங்கவும், அனைத்து அரசுத் துறைகளுக்கும் ஒரே மாதிரியான தரவுகள் கிடைப்பதையும், மாநில குடும்பத் தரவு தளம் உறுதி செய்யும். சரியான தகவல்களின் அடிப்படையில் கொள்கை முடிவுகளை எடுக்க உதவக்கூடிய இந்த இலட்சிய திட்டத்தை செயல்படுத்துவதற்கு, **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக **47.50** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கணினிமயமாக்கம் மற்றும் இணையவழி தரவு பெறுதலில் முக்கியமான அம்சம், தரவு தனியும் (Privacy) மற்றும் பாதுகாப்பும் ஆகும். **21.39** கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பினை நிறுவுவதற்கு இந்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறைக்காக மொத்தம் **153.97** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா

- இந்தியாவிலேயே அதிகமான வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை **2014** ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு தொடர்ந்து ஈர்த்து வருகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்திற்கு, **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், **90.85** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவித்தல் திட்டத்தின் கீழ், 295 சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்துவதற்கு கண்டறியப்பட்டு, அவை ஆறு சுற்றுலாச் சுற்றுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

- அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாடு, வணிக ரீதியிலான விருந்தோம்பல் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் உட்பட இத்திட்டத்திற்கான ஒட்டுமொத்தச் செலவு மதிப்பீடு 2,000 கோடி ரூபாயாகும்.

- மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், சீன அதிபர் அவர்களும், அண்மையில் மாமல்லபுரத்திற்கு வருகை புரிந்ததை அடுத்து, மாமல்லபுரத்தின் சுற்றுலா மேம்பாட்டிற்கு ஊக்கமளிப்பதற்கான சிறப்பு தொகுப்புத் திட்டம் ஒன்று 563.50 கோடி ரூபாய் மொத்த செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

- அதே போன்று, 9.80 கோடி ரூபாய் செலவில் இராமேஸ்வரத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு தொகுப்புத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறை

- 858 திருக்கோயில் குளங்கள் 4.69 கோடி ரூபாய் செலவில் தூர்வாரப்பட்டுள்ளன. 1,125 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 7,233.76 ஏக்கர் நிலங்கள், 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு, அவற்றின் பட்டாக்கள் கோவில்களின் பெயரிலேயே மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்து சமய அறநிலையத் துறைக்காக 281.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறை கட்டடங்கள்

- சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்காக, இனி வரும் காலங்களில், ஆண்டுதோறும் சிறப்பு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் என்று இந்த அவைக்கு அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதற்கென, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத்திட்ட மதிப்பீடுகளில், 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அரசு ஊழியர்களின் வாடகை வீட்டுத் தேவையை நிறைவு செய்வதற்கு, பொதுப்பணித் துறையின் மூலம் சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில், 76 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேலும் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு அமைக்கப்படும்.

சமூக நலன்

- பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களினால், 2019–20 ஆம் ஆண்டில் 1,04,795 நபர்கள் பயனடைந்துள்ளனர். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களுக்காக, 726.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அம்மா இரு சக்கர வாகனத்திட்டத்தின் கீழ், இதுவரை 1.88 இலட்சம் பணிபுரியும் மகளிருக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், 2020–21 ஆம் ஆண்டிலும் 253.14 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பணிபுரியும் மகளிர் விடுதிகளை நிருவகிப்பதற்கு, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் என்ற சிறப்பு நோக்க முகமையை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புதிய நிறுவனம், பணிபுரியும் மகளிர் விடுதிகளை நிர்வகிக்கும். சென்னையில் 8 இடங்களிலும், கிருஷ்ணகிரி, திருச்சி, ஒசூர், காஞ்சிபுரம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் தலா ஓர் இடத்திலும், மொத்தம் 13 இடங்களில் இத்தகைய விடுதிகளை அமைப்பதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

- வரவு–செலவுத் திட்டத்தில் பாலின சமத்துவத்திற்கான நிதி ஒதுக்கீட்டு அட்டவணையின் படி, 2020–21 ஆம் ஆண்டில் மகளிர் நலத் திட்டங்களுக்காக மொத்தம் 78,796.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 43,243 மதிய உணவு மையங்களில் செயல்படுத்தப்படும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ், நாள்தோறும் 48.57 இலட்சம் மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 1,863.32 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,535.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு சிறந்த வசதிகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்தித் தர இந்த அரசு முயற்சி செய்யும். தற்போது புதிதாக வகுக்கப்பட்டு வரும், தமிழ்நாடு மாநில குழந்தை நலன் கொள்கை விரைவில் வெளியிடப்படும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கு 175.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- முன்னோட்டத் திட்டமாக, 37 மாவட்டங்களிலும் உள்ள தலா 2 வட்டாரங்களில், 37 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் முதியோர் ஆதரவு மையங்களை இந்த அரசு தொடங்கும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூக நலன் மற்றும் மதிய உணவுத் திட்டத்திற்காக 5,935.13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **4,109.53** கோடி ரூபாய் மொத்த நிதியில், **2,018.24** கோடி ரூபாய் அவர்களின் கல்வித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

- உயர்கல்வி ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ், மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தொகை மிக அதிகமாக உயர்த்தப்பட்டு, **1,526.46** கோடி ரூபாய் எட்டியுள்ள நிலையில், மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்கு அளிக்கப்படும் தொகை கணிசமாகக் குறைந்துள்ளது.

- மத்திய மாநில அரசுகள் **60:40** என்ற விகிதத்தில் செலவினை ஏற்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மாநில அரசின் தளராத முயற்சிகளின் பலனாக, நிருவாக ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்துள்ள மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெறுவதில், மத்திய அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகள் மாற்றப்பட்டு விதிமுறைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதால், மேலும் பல மாணவர்கள் உயர்கல்வி ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,949.58** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நபார்டு வங்கி உதவியுடன், **106.29** கோடி ரூபாய் மொத்தச் செலவில், **223** ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

- **2018–19** ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் **2020–21** ஆம் ஆண்டிலும் **100** கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

- அனைத்து காலநிலைகளுக்குமான வீடுகள், இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், சூரியஒளி விளக்கு வசதிகள், வீட்டு வசதி மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிகள் போன்ற அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும், அனைத்து பழங்குடியினர் குடியிருப்புகளில் ஏற்படுத்துவதற்கு ஒரு சிறப்பு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்று தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்திற்காக, மாநிலத்திலுள்ள அனைத்து பழங்குடியினர் குடியிருப்புகளிலும் விரிவான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, வீட்டு வசதிக்கான **265** கோடி ரூபாய் உட்பட, **660** கோடி ரூபாயில் விரிவானதொரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்ட நிதியின் கீழ், **2020–21** ஆம் ஆண்டில், வீடுகள் தேவைப்படும் அனைத்து **8,803** குடும்பங்களுக்கும், தலா **3,00,000** ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தரப்படும். வீடு கட்டுவதற்கு ஆகும் செலவில், ஒரு வீட்டிற்கு கூடுதலாக ஆகும் செலவான **90,000** ரூபாய், பழங்குடியினர் நலத்திற்கான வரவு–செலவு

ஒதுக்கீடுகளில் இருந்து ஒரு சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படும். நிதி ஒதுக்கீட்டின் எஞ்சிய 395 கோடி ரூபாய், அணுகு சாலைகள், தெரு விளக்குகள், சூரிய ஒளி விளக்கு வசதி மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்காக மூன்று ஆண்டுகளாகப் பிரித்து வழங்கப்படும். 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 210 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019–20 ஆம் ஆண்டில் தொடங்கி நிறைவுறா பணிகளுக்கு நடப்பாண்டில் 40 கோடி ரூபாய் தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக 302.98 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக 1,034.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் நலன்

- 2019–20 ஆம் ஆண்டில், 3.64 இலட்சம் சிறுபான்மையின சமூகத்தைச் சார்ந்த மாணவ மாணவிகளுக்கு மொத்தம் 98.66 கோடி ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

- கிறிஸ்துவ தேவாலயங்களின் பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் நிதியுதவியை 1 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக அரசு உயர்த்தும்.

- மசூதிகளின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியுதவி 60 இலட்சம் ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

- வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும் வருடாந்திர நிர்வாக மானியம் 2.50 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலன்

- 2016 ஆம் ஆண்டு, மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டத்தை தமிழ்நாடு மிக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அரசு வேலைவாய்ப்புகளிலும் பொதுத்துறை நிறுவனங்களில் நடைபெறும் பணி நியமனங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், நிரப்பப்படாமல் நிலுவையிலுள்ள அனைத்து காலிப் பணியிடங்களுக்கும் சிறப்பு ஆட்சேர்ப்பு பணிகள் நடத்தப்படும்.

- தற்போது, அறிவுசார் குறைபாடுகள் உடையோர், கடுமையாக ஊனமுற்றோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டோர், தசைசிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு மானியமாக மாதம் ஒன்றிற்கு 1,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள 1.75 இலட்சம் நபர்கள் பயன்பெறும் வகையில் 313.26 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் மற்றும் பார்க்கின்சன் நோய், தண்டுவட மரப்பு நோய் ஆகிய நாட்பட்ட நரம்பியல் பாதிப்புக்கு உள்ளான நபர்களுக்கும், இனிமேல் மாதாந்திர பராமரிப்பு மானியம் வழங்கப்படும். புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவுகளுக்கும், உதவித்தொகை கோரி நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை ஒப்புதல் செய்வதற்கும், 2.1 இலட்சம் தகுதியுள்ள பயனாளிகள் பயன் பெறும் வகையில், 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு 375 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- பார்வைத் திறனற்றோர் மற்றும் கேட்கும் திறனற்றோர், பிறரை எளிதில் தொடர்பு கொள்வதற்கு, தக்க செயலிகளுடன் கூடிய திறன்பேசிகள், 10,000 பார்வைத் திறனற்றோர் மற்றும் கேட்கும் திறனற்றோருக்கு 10 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக 667.08 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் தேதி அன்று, 76.23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் துவக்கிவைக்கப்பட்ட 'அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தினால்' விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள், கிராமங்கள் மற்றும் பேரூராட்சிகளில் அமைக்கப்பட்டு, விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

- இத்திட்டம் கிராமப்புற இளைஞர்களிடையே மிகப் பிரபலமாகி, அவர்களைப் பெரிதாக உற்சாகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், கூடுதல் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கும், விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், டேபிள் டென்னிஸ், பாட்மிண்டன் மற்றும் விளையாட்டு உயிர் இயக்கவியலுக்கான (Sports Bio-mechanics) உயர்நிலை சிறப்பு மையங்கள் உட்பட உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதியுதவிகளை இந்த அரசு வழங்கியுள்ளது. இவற்றுடன், கனோயிங் மற்றும் கயாகிங்கிற்கான உயர்நிலை

சிறப்பு மையங்களும் நிறுவப்பட உள்ளன. இந்த வசதிகளைப் பயன்படுத்தி, தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய உயரிய செயல் திறன் மையம் உருவாக்கப்படும்.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 218.66 கோடி ரூபாய் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு (IFHRMS)

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு முறை, 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், கரூர் மாவட்டத்தில் தனி அமைப்பு முறையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பொது நிதிநிலை ஆராய்ச்சி மையம்

- பொருளியலில் தனித்துவம் பெற்ற நிறுவனத்திடமிருந்து உயர்தரமான கொள்கை ஆலோசனைகளைப் பெறுவது பெரிதும் பயனளிக்கும். எனவே, சென்னைப் பொருளியல் பள்ளி (Madras School of Economics) தனது வளாகத்திற்கு அருகே, ஒரு பொது நிதிநிலை ஆராய்ச்சி மையம் (Centre for Public Finance) நிறுவிட, அரசு ஆதரவு அளிக்கும். இம்மையத்தை அமைப்பதற்கு நிலம் மற்றும் 5 கோடி ரூபாய் மூலதன நிதியத்திற்கான மானியமாக அரசு வழங்கும்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள்

- அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டக் காப்பீட்டுக் கட்டணத் தொகை செலுத்துவதற்காக, முறையே, 342 கோடி ரூபாய் மற்றும் 306.65 கோடி ரூபாய், 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளது. காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கான நடைமுறைகளை எளிதாக்கும் வண்ணம், விரிவான வழிகாட்டுதல்கள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

- அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்குவதற்காக 173.95 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## வரவு–செலவுத் திட்ட நிதி ஆதாரங்கள்

- 2019–20 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் வருவாய் செலவினத்தின் ஒட்டுமொத்த அளவு 2,16,932.51 கோடியாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- 2019–20 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் 1,20,809.63 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டின் பங்காகப் பெறப்படும் மத்திய வரிகளின் நிதிப் பகிர்வு 2019–20 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் வரலாறு காணாத வீழ்ச்சியைக் கண்டுள்ளது,

- 2019–20 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் 33,978.47 கோடி ரூபாய் வழங்கப்படும் என மத்திய அரசு குறிப்பிட்டிருந்தது.

- தமிழ்நாட்டிற்கு மத்திய வரிகளில் வழங்கும் நிதிப் பகிர்வு 26,392.40 கோடி ரூபாய் மட்டுமே என்று குறைத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

- 2019–20 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 14,195.28 கோடி ரூபாயாக வசூலாகும் என கணிக்கப்பட்டுள்ளது.

- மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்2019–20 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25,602.74 கோடி ரூபாயாக உள்ளதைக் காட்டிலும் திருத்த மதிப்பீடுகளில் 30,463.57 கோடி ரூபாயை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2019–20 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மொத்த வருவாய் வரவினங்கள் 1,91,860.88 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2019–20 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த வருவாய்ப் பற்றாக்குறை 2019–20 ஆம்ஆண்டிற்கான மதிப்பீடான 14,314.76 கோடி ரூபாயிலிருந்து திருத்த மதிப்பீடுகளில் 25,071.63 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

- திருத்த மதிப்பீடுகளில் மூலதன நிதி ஒதுக்கீடு 31,220.89 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2019–20 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 31,251.21 கோடி ரூபாய் அளவிலேயே உள்ளது.

- 2019–20 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 55,058.39 கோடி ரூபாய் அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிப்பற்றாக்குறையானது மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் முன் மதிப்பீடுகள் (தற்காலிகத்தின்) அடிப்படையில் 3 சதவீதத்திற்குள் உள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடுகளில் வணிக வரிகளின் ஒட்டுமொத்த வசூல் தொகை 1,02,236.59 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடுகளில்

ஆயத்தீர்வையிலிருந்து கிடைக்கும் வருவாய் **8,133.81** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடுகளில், மோட்டார் வாகன வரி வருவாய் **6,897.73** கோடி ரூபாய் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- ஓர் ஆண்டுக்கும் குறைவாக உள்ள இனங்கள் உட்பட அனைத்து வாடகை ஒப்பந்தங்களுக்கும் இந்த புதிய வாடகை ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதன் முழு பயன்களை அடைவதற்கு நிலஉரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் இருவருமே தாமாகவே முன்வந்து பதிவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், ஐந்தாண்டிற்கு உட்பட்ட குடியிருப்புக்கான வாடகை ஒப்பந்தங்களில், தற்போது நடைமுறையிலுள்ள முத்திரைத் தாள் வரியினை **1** சதவீதத்திலிருந்து **0.25** சதவீதம் வரையில் குறைப்பதற்கு அரசு முடிவுசெய்துள்ளது. அத்தகைய இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான பதிவுக் கட்டணங்களும் **1** சதவீதத்திலிருந்து **0.25** சதவீதம் வரையில் குறைக்கப்பட்டு **5,000** ரூபாய்க்கு மிகாமல் வசூலிக்கப்படும். முத்திரைத் தாள் வரி மற்றும் பதிவுக் கட்டணங்களிலிருந்து வசூலிக்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை **14,435.09** கோடி ரூபாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், மாநில அரசின் சொந்த வரி வருவாய் மீதான மொத்த வரவினங்கள் **1,33,530.30** ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் வரியல்லாத வருவாய் வரவினங்கள் **15,898.81** ரூபாயாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

- மத்திய வரிகளின் நிதிப் பகிர்வுக்கு பிந்தைய வருவாய் பற்றாக்குறைக்கான மானியமாக, தமிழ்நாட்டிற்காக பரிந்துரைக்கப்பட்ட **4,025** கோடி ரூபாயை சேர்த்து மத்திய அரசிடமிருந்து மானியத் தொகை **37,096.69** கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. **2020–21** ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் வரவுகள் **2,19,375.14** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- **2020–21** ஆம் ஆண்டிற்கான வருவாய் செலவினங்கள் உள்ளபடியான நிலவர அடிப்படையில் **2,04,992.78** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, நிகரக் கடன் மற்றும் முன்பணங்கள் உட்பட ஒட்டுமொத்த மூலதன நிதியொதுக்கீடு **37,728.65** கோடி ரூபாயாக கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது **2019–20** ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் **25.8** சதவீதம் உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது. பல்வேறு திட்டங்களுக்கான ஒப்புதல் ஏற்கெனவே வழங்கப்பட்டு, அதற்கான திட்டப் பணிகள் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டும், நிதித் தேவைக்ககாக திட்டப்பணிகளில் தொய்வு

ஏற்படாமல் நடைபெறுவதையும் உறுதி செய்வதற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2020–21** ஆம் ஆண்டில், பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்கில் மூலதன நிதி ஒதுக்கீடுகள் உயர்த்தப்பட்ட போதிலும், ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை **59,346.29** கோடி ரூபாயாக மட்டுப்படுத்தப்பட்டு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **2.84** சதவீதமாக உள்ளது.

- **2020–21** ஆம் ஆண்டின் நிதிப் பற்றாக்குறைக்கு நிதி வழங்கும் வகையில், அனுமதிக்கப்பட்ட ஒட்டுமொத்த கடன் அளவான **62,757.80** கோடி ரூபாயில், நிகர கடன் தொகையாக **59,209.30** கோடி ரூபாய் திரட்டப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, **2021** ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் நிலுவையிலுள்ள நிகரக்கடன் **4,56,660.99** கோடி ரூபாயாகவும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் **21.83** சதவீதமாக, **25** சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.